TAMIL NADU LEGISLATIVE LIB
20 AUG 1980
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1980, பிப்ரவரி, 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்பு

பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கே. ஆர் கரந்த் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. ஆர். கரந்த் அவர்கள் 1 பிப்ரவரி 1980 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். கரந்த் அவர்கள், 1926 ஆம் ஆண்டில் இருந்து 1929 ஆம் ஆண்டு வரை அன்றைய சென்னை சட்ட மன்ற மேலவையில் சுயராஜ்ய கட்சி உறுப்பினராகவும், சிறிது காலம் பேரவைச் செயலராகவும் இருந்தார். 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டு வரை புத்தூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்தும், பின்னர் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை காஸர்கோடு தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்று அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகவும், 1946-47 ஆம் ஆண்டு திரு. பிரகாசம் அவர்களின் அமைச்சர் அவையில் வருவாய்த் துறை அமைச்சராகவும் இருந்து சிறந்த முறையில் நமது நாட்டுக்குச் சேவை செய்துள்ளார்கள்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக நின்றனர்.)